# திருச்சி தெற்கு மாவட்டத்தில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக பாக முகவர்கள் (BLA2- BDA -BLC) ஆலோசனைக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்- அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



கழகத்தலைவர் தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி“ஓரணியில் தமிழ்நாடு” என்ற முன்னெடுப்பின் கீழ் கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட,திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் வாக்குச்சாவடி வாரியாக பாக நிலை முகவர்கள் (BLA2), BDA மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), ஆலோசனைக்கூட்டம் திருச்சி தெற்கு மாவட்ட தொகுதி பார்வையாளர்கள், கிழக்கு தொகுதி பார்வையாளர் கதிரவன், திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மணிராஜன், மணப்பாறை சட்டமன்ற தொகுதி மருத்துவர் அண்ணாமலை ஆகியோர் முன்னிலையில் கிழ்க்கண்ட தேதிகளில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

| தேதி | நேரம் | பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் | பகுதி,ஒன்றிய, நகர, பேரூர் கழகம் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 02/07/25 | மாலை06.00 | R.மோகன் | மலைக்கோட்டை பகுதி | ஏ.பி.மஹால் இ.பி.ரோடு |
| | மாலை06.30 | R.G.பாபு | மார்க்கெட் பகுதி | சரஸ்வதி நடராஜன் திருமண மண்டபம் |
| | மாலை 06.45 | T.P.S.S.ராஜ் முகமது | பாலக்கரை பகுதி | செல்லக்கண்ணு அம்மாள் திருமண மண்டபம் துரைசாமிபுரம் |
| | மாலை07.00 | A.M.G.விஜயகுமார் | அரியமங்கலம் பகுதி | திருஇருதய சாமி மக்கள் மன்றம், சங்கிலியாண்டபுரம் |
| | மாலை07.30 | G.மணிவேல் | கலைஞர் நகர் பகுதி | மாலதி மஹால் கே.கே. நகர் |
| | காலை08.30 | M.R.T.P.K.தங்கவேல் | கூத்தைப்பார் பேரூர் | தொ.மு.ச அலுவலகம் |
| | காலை09.00 | O.நீலமேகம் | காட்டூர் பகுதி | எஸ்.கே. திருமண மண்டபம் காட்டூர் |
| | மாலை06.00 | E.காயாம்பு | துவாக்குடி நகரம் | ஏ.ஆர்.எஸ். திருமண மண்டபம் துவாக்குடி மலை |
| | மாலை06.30 | K.S.M.கருணாநிதி | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | தொ.மு.ச அலுவலகம் |
| | மாலை06.45 | C.கங்காதரன் | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | விஜயகௌரி திருமண மண்டபம் நவல்பட்டு |
| 02/07/25 | மாலை06.30 | S.சிவகுமார் | திருவெறும்பூர் பகுதி | நாகா திருமண மண்டபம் திருவெறும்பூர் |
| | மாலை07.00 | E.M.தர்மராஜ் | பொன்மலை பகுதி | ஏ.ஆர்.என். திருமண மண்டபம் மேலகல்கண்டார் கோட்டை |
| | காலை08.00 | C.செல்வராஜ் | மருங்காபுரி வடக்கு ஒன்றியம் | விடியல் திருமண மண்டபம் கோவில்பட்டி |
| | காலை08.30 | M.பழனியாண்டி | மருங்காபுரி மத்திய ஒன்றியம் | பி.ஏ.எஸ். திருமண மஹால் துவரங்குறிச்சி |
| | காலை08.45 | C.சின்ன அடைக்கண் | மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | எம்.எஸ்.எஸ். திருமண மண்டபம் துவரங்குறிச்சி |
| | காலை09.00 | V.A.ராஜேந்திரன் | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | லெட்சுமி மஹால் வையம்பட்டி |
| | மாலை 04.30 | மும்பை நாகராஜ் | பொன்னம்பட்டி பேரூர் | எம்.ஜெ.திருமண மண்டபம் துவரங்குறிச்சி |
| | மாலை05.30 | C.ராமசாமி | மணப்பாறை ஒன்றியம் | மணப்பாறை ஒன்றிய அலுவலகம் |
| | மாலை06.00 | மு.ம.செல்வம் | மணப்பாறை நகரம் | மகாலெட்சுமி திருமண மண்டபம் விராலிமலை ரோடு |
| | மாலை06.30 | R.ஸ்ரீரங்கன் | வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | திருமண மண்டபம் பூலாம்பட்டி |
| | மாலை 07.00 | V.A.ராஜேந்திரன் | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | லெட்சுமி மஹால் வையம்பட்டி |

இந்த நிகழ்வில் தொகுதி பார்வையாளர்கள், பகுதி,ஒன்றிய, நகர, பேரூர் கழக பார்வையாளர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள், தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு : பயிற்சி பெற்ற 871 பேரும், தலா ஒரு பாகத்திற்கு, மாவட்டக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் பயிற்சி அளிப்பார்கள். இதற்கான ஏற்பாடுகளை அந்தந்த பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் செய்து தரக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். இப்பயிற்சிக்கு முறையான இணைய வசதி, LEDஇருப்பது அவசியம்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**
செயலாளர் – திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று (30.06.2025) சென்னை. நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் 2025–26 ஆம் கல்வியாண்டு முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான ஒரு வார கால அறிமுகப்பயிற்சி வகுப்பு தொடக்க விழாவில் கலந்து கொண்டு விழா பேருரையாற்றினார். இந்நிகழ்வில் நந்தனம் அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் சி.ஜோதிவெங்கடேஸ்வரன், தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் இரா.கருணாநிதி, வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் வே.புகழேந்தி, தேர்வுக் கட்டுப்பாட்டாளர் முனைவர் கோ.பு. கிரிவாசன், திரைப்பட இயக்குநர் ராஜவிஜயசங்கர் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### நெல்லை – பாளையங்கோட்டையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில்

# ரூ.98.81 லட்சத்தில் 1231 மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்கள்!

## அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்!

நெல்லை, ஜூலை 1-

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் மாவட்ட நிர்வாகம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை,அலிம்கோ மற்றும் இந்தியன் ஆகிய நிறுவனத்தின் சார்பில் சமுதாயப் பொறுப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூபாய் 98.81 லட்சம் மதிப்பில் 1231 மாற்றுத்திறனாளி உபகரணங்களை பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்வில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என். நேரு பங்கேற்று வழங்கினார்.

பின்னர் அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்ததாவது.

தி.மு.க.வை ஆட்சியில் இருந்து அகற்றுவேன் என சொல்லித்தான் நயினார் நாகேந்திரன் மாநில தலைவர் ஆகியுள்ளார், அவர் தலைவராவதற்கு முன்பு எங்களிடம் என்ன பேசினார் என்பதை பொதுவெளியில் சொல்ல முடியாது. அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணிக்குள் இருக்கும் பிரச்சினையை சரி செய்து விட்டு கூட்டணி ஆட்சியா? தனித்து ஆட்சியா? என்பதை முடிவெடுத்த பின்னர் தி.மு.க கூட்டணி பற்றி அவர்கள் பேசட்டும். பாளையங்கோட்டை காந்தி தினசரி காய்கறி சந்தை வியாபாரிகள் கடை ஒதுக்கீடு செய்யப்படாதது தொடர்பாக தொடர் போராட்டம் அறிவித்து இருப்பது குறித்து கடைகள் ஒதுக்கீடு தொடர்பாக ஏற்கனவே வியாபாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி முடிக்கப்பட்டது பொதுப்பணித்துறை நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையை வழங்கி அவர்கள் கடையை எடுத்துக் கொள்ளலாம் என தெரிவித்து விட்டோம்.

ஆனால் தனிநபர் ஒருவர் தொடர்ந்து நீதிமன்ற வழக்கு காரணமாக இந்த பிரச்சனை எழுந்துள்ளது. தற்போது அந்த விவகாரம் தொடர்பாக நீதிமன்றத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநகராட்சி சார்பில் மேல் முறையீடு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. போராட்டத்தை கைவிடுவது தொடர்பாக வியாபாரி களிடமும் பேச்சுவார்த்தை நடத்தப் பட்டுள்ளது நீதிமன்றம் என்ன உத்தரவிடுகிறதோ அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும்.வரும் 5 ம் தேதி நெல்லை மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரி என இரண்டு இடங்களில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த அதிகாரிகள் இந்த முகாமில் கலந்து கொண்டு பலருக்கு வேலை வாய்ப்பு வழங்க உள்ளனர். வரும் 8ம் தேதி நடைபெறும் நெல்லையப்பர் கோவில் தேரோட்டத்திற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. சிதலமடைந்த சாலைகளை செப்பனிட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.சிறப்பான முறையில் இந்த ஆண்டு தேரோட்டம் நடத்து வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

அப்போது நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளராக இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன் கான்,மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ. எல்.எஸ். லெட்சுமணன்,பேச்சிபாண்டியன் உள்பட கழக நிர்வாகி கள் பலர் உடன் இருந்தனர்.

### அமைச்சர் கோவி.செழியன்– மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. முன்னிலை! நந்தனம் கி.மதி– எஸ்.முரளி வரவேற்புரை!

# மயிலை சி.தசரதன் இல்ல மணவிழா! டி.ஆர்.பாலு எம்.பி. தலைமை!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.– முன்னணியினர் வாழ்த்து!

சென்னை, ஜூலை 1-

சென்னை தென் மேற்கு மாவட்டம் தலைமை செயற்குழு உறுப்பினர் மயிலை சி. தசரதன்- கமலாவதி ஆகியோரின் புதல்வர் -டி.சந்தன் - -எஸ்.சுபாஷீனி ஆகியோரின் மணவிழா நாளை (2.7.2025- புதன் கிழமை) அன்று காலை 9.10 மணிக்கு சென்னை, திருவொற்றியூர், தேரடி, வடக்கு மாடவீதி, திருமதி புஷ்பம் பழனிச்சாமி திருமண மாளிகையில் (டி.கே.பி.) நடைபெறுகின்றது.



மணவிழாவிற்கு கழகப் பொருளாளரும் மக்களவை கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு எம்.பி., அவர்கள் தலைமை ஏற்று மணவிழாவினை நடத்தி வைத்து மணமக்கள் டி.சந்தன் - எஸ்.சுபாஷினி ஆகியோரை வாழ்த்துகிறார்.

மணவிழாவிற்கு உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், சென்னை வட கிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். மயிலை பகுதிச் செயலாளர்கள் நந்தனம் மதி, எஸ்.முரளி ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

இம்மணவிழாவில் சென்னை தென் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை தா.வேலு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

மேலும் தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் உள்பட கழக முன்னணியினர் தோழர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இன்று மணவிழா வரவேற்பு இன்று (1.7.2025- செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணிக்கு மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

மயிலை சி.தசரதன் நன்றி கூறுகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். கலைச்செல்வன்

### ஜூலை 1 (2018)



இளம்வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தீவிர கழகப் பணியாற்றியவர்.

தேனி மாவட்டம், காக்கில் சிக்கையன்பட்டி கிளைச் செயலாளர், ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, கம்பம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தேவகோட்டை நகர் கழகத்தின் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 102 வது பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

## கே.ஆர்.பெரியகருப்பன் – மு.தென்னவன் – தமிழன் பிரசன்னா சிறப்புரை!

சிவகங்கை, ஜூலை 1

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர்கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் 102 ஆவது பிறந்த நாள் பொதுக்கூட்டம் அண்ணா அரங்கில் நகர்கழக செயலாளர் நகர்மன்ற உறுப்பினர் பெரி. பாலமுருகன் தலைமையில் நிர்வாகிகள் இரா. கருணாநிதி, கா. இளங்கோ, கதி. அன்புச்செல்வன் ,எம் மனோகரன், கே. விசாலாட்சி, முருகன், தல தமிழ், எஸ்பி. மும்முடிநாதன், ஜெ.ஜாகிர் உசேன் இலக்கிய அணி அழகை யா,மனோ பிரகாஷ், பி.ஆர்.எஸ். ஞானாம்பாள், ஆர். சிவகாமி, ராமநாதன் ,சாந்தி, கருணாகரன், ஆர். பாண்டி மீனாள், கார்த்திகேயன், கலைச்செல்வன், காளை, பி.ஆ.ர்எஸ். பாண்டியன், ஷங்கர், கே. அரவிந்த், மகாதேவன்,ஜெ. லட்சுமணன்,செல்வம் , ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் செல்வராஜ் வரவேற்று பேசினார் .


இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தலைமைக் கழக இணை செய்தி தொடர்பாளர் தமிழன்பிரசன்னா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் திருமதி ஜோன்ஸ்ருசோ, பொதுக்குழு உறுப் பினர் ஜெ.மதார்சேட், மாவட்ட இளைஞரணி அணிப்பாளர் நாகனி செந்தில்குமார், ஒன்றிய கழகச் செயலாளர்கள் நாகனிரவி, வே. பூபால சிங்கம், லெ.மு.ரவிச்சந்திரன் நகர்கழக வார்டு நிர்வாகிகள் ஆனந்த், செல்வம், மாணிக்கம் ,செந்தில்குமார், ரவி , விக்கி, லட்சுமணன், வெங்கடேஸ்வரன், விக்னேஸ்வரன், முருகேசன், ரவீந்திரன், ராஜேந்திரன், கண்ணன், ராமலிங்கம், பிரியன், மேஸ்திரி மனோகர், கார்த்திகேயன், ராமநாதன், கஸ்பார், ஜான் பிரிட்டோ, ராஜா, அப்துல் ஜபார், பெருமாள், செல்வன், கருப்பு, தமிழ்ச்செல்வி, ராமு, ஷாஜகான், பேச்சியப்பன், ராமதாஸ், வாழ வந்தான், சொர்ண காளை, மணிமாறன், செந்தில்குமார், மாரிமுத்து, பழனி, பாஸ்கர், சதீஷ்குமார் அருண், சாந்தி, ராதா, காந்திதாஸ், ஆகியோர் கலந்து கொண்டார்கள் நகர ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.அரவிந்த் நன்றி கூறினார். பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை நகர் கழகச் செயலாளர் பெரி . பாலமுருகன் தலைமையில் நகர்கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை கே. தாவூது

### ஜூலை 1 (2004)



மதுரை மாநகர் நெல்பேட்டை பகுதியில் வட்டக் கழக பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர், மாநகர் கழக துணைச் செயலாளர், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

இவர் நிர்வாகப் பொறுப்பில் இருந்தபொழுது மதுரை மாநகர் மாவட்டக் கழகத்திற்கு சொந்தமாக இடம் வாங்கி மேயர் முத்து மன்றம் என்ற பெயரில் கட்டிடம் கட்டி, தலைவர் கலைஞர் அவர்களை அழைத்துவந்து திறந்து வைத்தார்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**